## கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 340 / 2014 / எம்சி. 8 நாள் : 23.01.2014**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் **30.01.2014** வியாழக்கிழமை முற்பகல் **11.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

உண்மை நகல்

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜனவரி 2014

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | கல்விபிரிவு - மாநகராட்சி உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகள் 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்க்கு சிறப்புக் கட்டணம் இரத்து செய்து ஆணை வழங்கியது - நிதி இழப்பை அரசு ஈடு செய்தது –மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து ஈடு செய்ய அனுமதி வழங்கக் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 2 | குடிநீர் விநியோகப் பிரிவு - 70 கணினி விபர பதிவாளர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் நெட்வொர்க் இன்ஜினியர், ஒரு உதவி நெட்வொர்க் இன்ஜினியர் பணியிடங்கள் - பணிக்காலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 3 | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள கழிவு நீர் அடைப்புகளை சரி செய்யும் பணிக்கென இரண்டு எண்ணிக்கைகள் கழிவு நீர் அடைப்பு அகற்று (Vehicle Mounted Jetting Cum Suction Machine) இயந்திரங்கள் மற்றும் பொதுக்கழிப்பிடங்களை சுத்தம் செய்யும் பணிகளுக்கென இரண்டு எண்ணிக்கைகள் கழிவு நீர் உறிஞ்சி (Vehicle Mounted Vacuum Suction Machine) இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனங்களை வாங்குதல் - ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - 21 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - ஐந்து மண்டலங்களிலும் பழுதடைந்துள்ள சாலைகளை செப்பனிடுதல் பணி - ஐந்து சிப்பங்களாக மண்டல வாரியாக பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் சுமார் 5000 சதுர மீட்டர் அளவில் பணிகளை மேற்கொள்ளுதல் - மதிப்பீடு ரூ. 98.50 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | நகரமைப்பு பிரிவு – கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம், சௌரிபாளையம் கிராமம், க.ச.492/1, வண்டிப்பாதை மற்றும் க.ச.503/2 இட்டேரி புறம்போக்கு – 0.56 ஏக்கர் நிலம் - தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - 8 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.86 உக்கடம் லாரிப்பேட்டை மொத்த வியாபார மீன் மார்க்கெட் – கட்டணம் வசூலிக்கும் உரிமம்– கால நீடிப்பு வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 9 | நகரமைப்பு – சத்தி சாலையில் இயங்கி வரும் ஆம்னி பேருந்து நிலையத்தினை நீலாம்பூர் கிராமம் சர்வே எண்.712/2ல் 6.6 ஏக்கர் மற்றும் சர்வே எண்.715/1ல் 3.8 ஏக்கர் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கவும் நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து இடத்தினை பெறவும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி பெறுதல் – தொடர்பாக. |
| 10 | Jnnurm – பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டம் - திட்ட நிதி ஒதுக்கீட்டைக் காட்டிலும் கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளுதல் - அரசாணை பிறப்பிக்கப்பட்டது – மாமன்றத்தில் பதிவு செய்தல் - தொடர்பாக |
| 11 | Jnnurm – பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டம் - எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம் செய்தல் - 24 x7 குடிநீர் திட்டம் - உத்தேச விலை ஏற்றங்களின் அடிப்படையில் மாறுபட்டுள்ள திட்ட கூடுதல் செலவினத்திற்கு மாநில அரசின் நிர்வாக அனுமதி கோரும் முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசிற்கு அனுப்புதல் - மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 12 | Jnnurm – மாநகராட்சி பகுதிகளில் உள்ள 8 நீர்நிலைகளை புனரமைத்தல் - திருத்திய திட்ட அறிக்கை தயாரித்தல் - மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 13 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண்.24 - மேற்கு ஆரோக்கியசாமி ரோடு வடக்கு பகுதியில் உள்ள (1-40) கடைகளில் கடை எண்.11-ஐ தமிழ்நாடு கனிபொருள் நிறுவனத்திற்கு வாடகை நிர்ணயம் செய்து ஒப்படைத்தல் - வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்யப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| 14 | பணியமைப்பு – 23.02.2014ந் தேதி முதல் 05.03.2014ந் தேதி வரை இங்கிலாந்து நாட்டில் ஆய்வுப் பயணமும் 26.02.2014 மற்றும் 27.02.2014ல் லண்டன் மாநகரில் நடைபெறும் “Energy from Waster Conference”ல மற்றும் ஸ்வீடன் நாட்டில் 03.03.2014 மற்றும் 04.03.2014ல் நகர்புற மேம்பாடு தொடர்பான ஆய்வில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கலந்து கொள்ளுதல் - மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் – மாமன்றத்தின் அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 15 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – இம்மாநகராட்சிக்கு புதியதாக துணை ஆணையாளர் (பணிகள்) மற்றும் துணை ஆணையாளர் (சுகாதாரம்) பணியிடங்கள் தோற்றுவிக்க அரசுக்கு கருத்துரு அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | பொதுப்பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற உறுப்பினர்களின் பணித்திறனை மேம்படுத்தும் வகையில் ஓர் புத்தாக்கப் பயிற்சியினை தனியார் அமைப்பு மூலம் வழங்குதல் மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 17 | கல்வி பிரிவு – மாநகராட்சி கிருஷ்ணாபுரம் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்துதல் - அரசாணை வழங்கக்கோரி அரசுக்கு கருத்துரு அனுப்புதல் மற்றும் தரம் உயர்த்தப்படவேண்டிய பொதுமக்கள் பங்குத்தொகை ரூ. 1.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்பதல் கோருதல் - தொடர்பாக |
| 18 | கல்விப்பிரிவு - தடதள மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட இராமகிருஷ்ணாபுரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு செலவினத்தொகை வழங்கப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| 19 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 60 – எஸ்.எம்.எஸ். லேஅவுட்டில் பள்ளிக் கட்டிடம் கட்டுதல் பணி – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | பொறியியல் பிரிவு - 12 அபிவிருத்திப் பணிகள் - மழைநீர் வடிகால் சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல் - ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 21 | பொறியியல் பிரிவு - பொது சுகாதார பிரிவில் 6 நகர்நல மையங்களுக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் வாங்குதல் - ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 22 | பொறியியல் பிரிவு - பொதுமக்கள் குறைகளை களைய மாமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகம் கட்டுதல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 23 | பொறியியல் பிரிவு - மாமன்ற கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்ட நடவடிக்கைகளை தட்டச்சு செய்ய தனியார் மூலம் ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் நியமனம் செய்தல் மற்றும் கோவை மாநகராட்சியில் தனியார் ஒப்பந்தம் மூலம் ஒரு உதவி திட்ட அமைப்பாளர் நியமனம் செய்தல் – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 24 | பொறியியல் பிரிவு - 3 அபிவிருத்திப் பணிகள் - மாநகராட்சி ஆரம்ப பள்ளிகள், நடுநிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் காவலாளிகள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர்கள், மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் பணி - ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 25 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 38 – கருப்பண்ண மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடத்தில் மகளிர் மற்றும் சிறுவர் பூங்கா அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 26 | கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 7 மாநகராட்சி பள்ளிகளை தரம் உயர்த்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 27 | பொது சுகாதாரப் பிரிவு - புது டெல்லியில் கோழி தேசிய இறைச்சி மற்றும கோழி பதப்படுத்தும் வாரியத்தின் மூலம் நடைபெறும் தொடர்பான தேசிய கருத்தரங்கத்தில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் கலந்து கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 28 | நகரமைப்பு – மேற்கு மண்டலம், வார்டு எண்.22, மேட்டுப்பாளையம் சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை B-11 காவல் நிலையம் அமைக்க அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது – காவல் துறை ஆணையர் காவல் நிலையம் அமைக்க முன் நுழைவு அனுமதி வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 29 | நகரமைப்பு பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 13 – க.ச.எண் 544 - இட்டேரி புறம்போக்கு பகுதியில் வசிக்கும் 16 நபர்களை ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்க மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து உத்தேசிக்கப்பட்டது – மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை சான்று வழங்கக் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 30 | நகரமைப்புப் பிரிவு - மத்திய மண்டலம் - பெரிய கடை வீதி என்.எச். ரோடு, வெரைட்டி ஹால் ரோடு, ஒப்பணக்கார தெரு, ராஜா தெரு ஆகிய சாலைகள் மற்றும் வ.உ.சி. பூங்கா முன்புறம் உள்ள சாலை, வ.உ.சி. மைதானத்தை ஒட்டி மேற்குபுறம் உள்ள இரு சாலைகளையும் சேர்த்து பாதசாரிகள் மட்டும் பயன்படுத்த ஏற்றவாறு வடிவமைப்பு செய்யவும் பராமரிக்கவும் விருப்ப கேட்பு அறிக்கை தயாரிக்க ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 31 | பொறியியல் பிரிவு - மரபுசாரா எரிசக்தித்துறை அமைச்சரகத்தின் பைலட் சோலார் சிட்டி திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் ரூ.5.00 கோடி நிதியில் மாநகராட்சீயின் பங்கான ரூ.2.50 கோடியினை மாநகராட்சி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தல் மற்றும் ரூ.2.50 கோடியினை மரபு சாரா எரிசக்தி அமைச்சரகத்திடம் கோருதல- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

அ) **திருக்குறள்**

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

**(குறள் - 1025)**

**விளக்கம்**

தூய்மையான எண்ணத்துடன் குடிமக்கள் நலன் செழிக்க வாழ்பவர்களை உறவினராகக் கருதி மக்களினம் சுற்றிவருவர்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம் எண் 1**

கோயம்புத்துார் மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டப்பணிகளை செயல்படுத்தும்போது ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டிருந்த பல குடியிருப்புகள் அகற்றப்பட்டு உள்ளன. கோயம்புத்துார் மாநகராட்சியில் சொந்த வீடு இல்லாதவர்கள் பலர் இருக்கின்ற நிலையில், அவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டுவதற்கு தமிழக அரசால் நிதி ஒதுக்கப்பட்டு 12000க்கும் மேற்பட்ட வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 7000 வீடுகள் மட்டுமே இதுவரை கட்டப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியில் கோவை அம்மன்குளம் பகுதியில் கட்டப்பட்ட வீடுகள் குடியிருக்க தகுதியற்றதாக இருக்கும் நிலையில் மீதமுள்ள 5000 வீடுகள் கட்டுவதற்கு தகுந்த இடம் இல்லை என தெரிவிக்கப்பட்டு இம்மாநகராட்சியிடம் இடம் ஒதுக்கித் தருமாறு கோரிக்கை வைக்கப்பட்டு உள்ளது.

எனவே பொருத்தமான மாற்றுஇடம் இல்லாத நிலையில் கோயம்புத்துார் மாநகராட்சிக்குச் சொந்தமான வெள்ளலூர் பகுதியில் அமைந்துள்ள 650 ஏக்கர் நிலத்தில் 20 ஏக்கர் நிலத்தை வீடுகள் கட்டுவதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அரசின் அனுமதியுடன் வழங்கலாம் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 44 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு ரா. வெண்தாமரை பாலு அவர்களால் முன்மொழியப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் திரு ஆர். பிரபாகரன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 30.1.2014**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் எண் 2**

கோயம்புத்துார் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியான பாதாள சாக்கடை திட்டப்பணிகள் பல பகுதிகளில் விடுபட்டு உள்ளது. பல இடங்களில் தொடர்ச்சியாக குழாய்கள் அமைக்கப்படாமல் உள்ளது. இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மீதித்தொகை இருப்பதால் மேற்கண்ட திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் விடுபட்ட பகுதிகளையும், பணிகள் முழுமைபெறாத பகுதிகளில் பணிகளை முடிக்கவும், தேவையான இடங்களில் மழைநீர் வடிகால் கட்டவும் மேற்படி எஞ்சிய தொகையை பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் வடக்கு மண்டல தலைவர் திரு பா. ராஜ்குமார் அவர்களால் முன்மொழியப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் திரு ஆர். பிரபாகரன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 30.1.2014**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் எண் 3**

கோயம்புத்துார் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள பல மனைப்பிரிவுகளில் காலியிடமாக உள்ள இடங்களில் அவற்றின் உரிமையாளர்கள், அவற்றை சுகாதாரமான முறையில் பராமரிக்காததால், அவ்விடங்கள் குப்பைகள் சேரும் இடமாகவும், புதர்கள் மண்டியும் பொது சுகாதாரத்திற்கு பெரிதும் இடையூறாக விளங்கி வருகிறது.

எனவே அவ்விடங்களின் உரிமையாளர்களை கண்டறிந்து மேற்கண்ட இடங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள அறிவிப்பு வழங்கியும், அதற்குப்பிறகும் சரியாக பராமரிக்கப்படாத இடங்களை மாநகராட்சியே சுத்தம் செய்து, அவ்விடத்திற்கான காலியிட வரிவிதிப்பு செய்யும்போதோ அல்லது அவ்விடத்தில் கட்டுமானப் பணிக்கு அனுமதி அளிக்கும்போதோ, பராமரிப்பு செலவினத்தையும் சேர்த்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 52 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு அ. நந்தகுமார் அவர்களால் முன்மொழியப்பட்டு பணிகள் குழு தலைவர் திரு கே. அர்ச்சுனன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 3 நாள் 30.1.2014**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 40 வார்டுகளில் LED விளக்குகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்பிருந்த பகுதிகளுக்கும் (60 வார்டுகள்) புதியதாக LED விளக்குகள் பொருத்தவும் அதற்கான செலவினத்தை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 62 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு எஸ். பாலன் அவர்களால் முன்மொழியப்பட்டு மத்திய மண்டல தலைவர் திரு கே.ஏ. ஆதிநாராயணன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 4 நாள் 30.1.2014**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை மேலும் செம்மைபடுத்தும் விதமாக, வீடுகள் தோறும் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளில் இருந்து பிளாஸ்டிக்கை பிரித்து எடுத்து அதை மறுசுழற்சி செய்யும் பணிக்கு தனியார் நிறுவனங்களை சார்ந்து செயல்பட வேண்டி இருப்பதால் அப்பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தவிர்க்கும் விதமாக மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு உரிய பயிற்சி அளித்து இயந்திரங்கள் வாங்குவதற்குத் தேவையான நிதியினை அளித்து பிளாஸ்டிக்கை மறு சுழற்சி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மண்டலத்திற்கு ஒன்று வீதம் பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக்குழுக்களை ஈடுபடுத்தவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 23 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். மணிமேகலை அவர்களால் முன்மொழியப்பட்டு சுகாதாரக்குழுத் தலைவர் திருமதி எஸ். தாமரைச் செல்வி அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 5 நாள் 30.1.2014**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் எண் 6**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளர்கள் மிகவும் சிறந்த முறையில் பணிபுரிந்து வருகிறார்கள். திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் முக்கிய அம்சமான பிளாஸ்க்கை பிரித்து எடுத்து மறு சுழற்சி செய்வதில் பெரும் பங்கு வகிக்கிறார்கள்.

அவர்களை ஊக்குவிக்கும் விதமாக கோவை மாநகராட்சியின் நிரந்தர துப்புரவுப் பணியாளர்கள் அனைவருக்கும் 2014 பொங்கல் தினத்தன்று பச்சரிசி 1 கிலோ, வெல்லம் 1 கிலோ 1 ஜோடி கரும்பு மற்றும் பொங்கல் வைப்பதற்குத் தேவையான இதர பொருள்களை தலா ஒருவருக்கு ரூ. 250 மதிப்பில் மாநகராட்சியின் நிதியிலிருந்து மொத்தம் ரூபாய் 7,27,500- (ரூபாய் ஏழு இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கப்பட்டது. மேற்கண்ட செலவினத்திற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வழங்கலாம் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 6 நாள் 30.1.2014**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## பொருள் எண் 1

பொருள் - நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகள் 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்க்கு சிறப்புக் கட்டணம் இரத்து செய்து ஆணை வழங்கியது -நிதி இழப்பை அரசு ஈடு செய்தது – மாநகராட்சி கல்வி நிதியில் ஈடு செய்ய உத்தரவிட்டது -மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து ஈடுசெய்ய அனுமதி வழங்கக் கோருதல் - சார்பு.

பார்வை -

1. அரசாணை (நிலை எண்.110 பள்ளிக்கல்வித்துறை நாள்.29.05.2008.
2. இவ்வியக்க இதே எண்ணிட்ட கடித நாள்.16.10.2012, 21.03.2013 மற்றும் 17.09.2013.
3. அரசாணை (நிலை) எண்.208 பள்ளிக்கல்வி (ப.க5(1) துறை நாள்.10.10.2013.
4. பள்ளிக்கல்வி இயக்குநர் ந.க.எண். 50104/ஜி2/இ3/2013 நாள்.08.11.2013.

---------------

அரசு மற்றும் நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு, (மாநகராட்சி உட்பட) 6 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியரிடம் வசூலிக்கப்படும் சிறப்புக்கட்டணம் இரத்து செய்து அரசாணை நிலை எண்.110 பள்ளிக் கல்வித் துறை நாள் 29.05.2008-ன்படி கடந்த 2008-2009-ம் ஆண்டு முதல் நிதி இழப்பினை அரசே ஈடுசெய்து வந்தது. இதில் 2008-2009-ம் ஆண்டிற்கான தொகை முதன்மை கல்வி அலுவலர் மூலமாக வழங்கப்பட்டது. 2009-2010 மற்றும் 2011-2012 ஆகிய கல்வி ஆண்டிற்கு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களிடமிருந்து தொகை பெறப்பட்டு தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2010-2011, 2012-2013 மற்றும் 2013-2014 ஆண்டுகளுக்கு தொகை வழங்க வேண்டி பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. ஆனால் பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களது கடித ந.க.எண்.50104/ஜி2/இ3/2013 நாள்.08.11.2013-ல் அரசாணை நிலை எண் 208 பள்ளிக்கல்வி (ப.க.5(1))துறை நாள்.10.10.2013–ன்படி உள்ளாட்சி நிறுவன பள்ளிகளுக்கு, இழப்பீட்டுத் தொகை வழங்கப்படமாட்டாது எனக் குறிப்பிட்டுள்ளதாகவும், எனவே, மாநகராட்சிப் பள்ளி மாணவ/மாணவியருக்கு சிறப்புக்கட்டண இழப்பீட்டுத் தொகையினை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து (Educational Cess) நிதியிலிருந்து ஈடு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் அரசாணை மற்றும் பள்ளிக் கல்விக்கல்வி இயக்குநர் அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, 2010-2011, 2012-2013 மற்றும் 2013-2014-ம் கல்வி ஆண்டிற்கு மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து (Education Cess fund) கீழ்க்கண்டவாறு தொகையினை ஈடுசெய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 2010-2011 | - | ரூ.8,14,262/- |
| 2012-2013 | - | ரூ.7,29,015/- |
| 2013-2014 | - | ரூ.7,19,208/- |

மேலும் இனிவரும் கல்வி ஆண்டுகளுக்கு தலைமையாசிரியர்களிடம் சிறப்புக்கட்டண கேட்பினை (Demant) அடிப்படையாகக் கொண்டு அத்தொகைகளை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து (Education Cess fund) ஈடுசெய்ய மாமன்றத்தின் தொடர் அனுமதி வேண்டியும், பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- 2010-2011, 2012-2013 மற்றும் 2013-2014-ம் கல்வி ஆண்டுகளுக்கு முறையே, ரூ. 8,14,262/-,ரூ.7,29,015/- மற்றும் ரூ.7,19,208/-ஐ ஈடு செய்ய அனுமதியும், இனிவரும் காலங்களில் தலைமையாசிரியர்களின் கேட்பின் (Demand) அடிப்படையில் தொகையினை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து (Educational Cess) ஈடு செய்யவும் அனுமதி வழங்கலாம்.

எண். 12578/2013/ கே 6

## மாநகர மன்ற தீர்மானம் எண். 342 நாள் 30.01.2014

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - 70 கணினி விபர பதிவாளர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் நெட்வொர்க் இன்ஜினியர், ஒரு உதவி நெட்வொர்க் இன்ஜினியர் - பணி நீட்டிப்பு செய்தல் - தொடர்பாக.

---------------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பிரதான அலுவலகம் மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களிலும் கணினிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு 70 கணினி விபர பதிவாளர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் நெட்வொர்க் இன்ஜினியர், ஒரு உதவி நெட்வொர்க் இன்ஜினியர் ஆகியோரை ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணியினை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.32 நாள் 08.07.2011 ன்படி M/s. KG Information Systems Pvt Ltd., கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. இந்நிறுவனத்தின் பணிக்காலம் 31.03.2013 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

மேலும் மாமன்றத் தீர்மான எண் - 136, நாள் 24.07.2013 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் உத்தரவின்படி ஐந்து மாத காலத்திற்கு (ஏப்ரல் 2013, மே 2013 ஜுன் 2013, ஜுலை 2013 மற்றும் ஆகஸ்ட் 2013) பணி நீடிப்பு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனத்தாரின் பணிக்காலம் 31.08.2013 அன்று முடிவடைந்துள்ளது.

மேலும் மாமன்றத் தீர்மான எண் - 223, நாள் 25.10.2013 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் உத்தரவின் படி மேலும் ஐந்து மாத காலத்திற்கு (செப்டம்பர் 2013, அக்டோபர் 2013, நவம்பர் 2013, டிசம்பர் 2013 மற்றும் ஜனவரி 2014) பணி நீடிப்பு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிறுவனத்தாரின் பணிக்காலம் 31.01.2014 அன்று முடிவடையவுள்ளது. இவற்றினை பொறியியல் பிரிவின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்து புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும் வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்தக்காலத்தை நீட்டிப்பு செய்து பணியினை மேற்கொள்ள M/s. KG Information Systems Pvt Ltd., நிறுவனத்திற்கு ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்யவும் மற்றும் பணிக்குரிய தொகையை வழங்கவும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதி வேண்டி மாமன்றத்தாள் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

பிரதான அலுவலகம் மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களிலும் கணினிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு 70 கணினி விபர பதிவாளர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் நெட்வொர்க் இன்ஜினியர், ஒரு உதவி நெட்வொர்க் இன்ஜினியர் கொண்டு கணினிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும் வரை ஏற்கனவே பணியினை மேற்கொண்டு வரும் M/s. KG Information Systems Pvt Ltd., நிறுவனத்திற்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்தக்காலத்தை நீட்டிப்பு செய்யவும் மற்றும் பணிக்குரிய தொகை வழங்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.5259/11/WS6

**மாநகர மன்ற தீர்மானம் எண். 343 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை பிரதான குழாய்களில் ஏற்படும் கழிவு நீர் அடைப்புகளை சரி செய்யும் பணிக்கென இரண்டு எண்ணிக்கைகள் கழிவு நீா் அடைப்பு அகற்று (Vehicle Mounted Jetting Cum Suction Machine) இயந்திரங்கள் மற்றும் மாநகராட்சி பகுதிகளிலுள்ள பொதுக்கழிப்பிடங்களை சுத்தம் செய்யும் பணிகளுக்கென இரண்டு எண்ணிக்கைகள் கழிவு நீா் உறிஞ்சி (Vehicle Mounted Vacuum Suction Machine) இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனங்களை ரூ.90.00 லட்சம் செலவினத்தில் வாங்கிக்கொள்ள கடந்த 30-11-2011 அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நகராட்சிகளின் நிர்வாக ஆணையருக்கு பிரேரணை அனுப்பி வைக்கலாமென பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

நகராட்சிகளின் நிர்வாக ஆணையா் அவரது 07-06-2013 தேதிய செயல்முறை நடவடிக்கைகளில் இம்மாநகராட்சிக்கு தேவையான மேற்கண்ட வாகனங்களை ரூ.90.00 லட்சம் மதிப்பீட்டில் வாங்கிக்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார். அதனை தொடர்ந்து கடந்த 04-10-2013ல் மேற்படி நான்கு எண்ணிக்கைகள் கழிவு நீர் அடைப்பு நீக்கு இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனங்களை கொள்முதல் செய்யும் பணிக்கு இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் (முதல் அழைப்பாக) கோரப்பட்டதில் கீழ்கண்ட நான்கு நிறுவனங்கள் கலந்து கொண்டு அவா்களது ஒப்பந்தப்புள்ளிகளை கொடுத்திருந்தனர்.

1) திி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே
2) தி/ள்.டி.பி.எஸ், இன்பிராஸ்ட்ரக்சர் லிமிடெட், புது டில்லி
3) தி/ள். நியூமெட்டிக் கன்ரோல்ஸ், கோயமுத்தூர்
4) தி/ள். வேல் என்டா்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் , கோயமுத்தூர்

மேலே படிக்கப்பட்ட நான்கு நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப கூறுகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 06-11-2013ல் திறனாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்கள் 1, 2 மற்றும் 3 ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள மூன்று நிறுவனங்கள் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறவில்லை. வரிசை எண் 4-ல் குறிக்கப்பட்டுள்ள தி/ள். வேல் என்டா்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், கோயமுத்தூர் நிறுவனத்தினர் தொழில்நுட்ப ரீதியாக தகுதி பெற்றதாக ஆணையருக்கு பரிந்துரை செய்யப்பட்டதில் கடந்த 06-11-2013ல் ஆணையா் விலைப்புள்ளியை திறக்கலாமென அனுமதி அளித்ததனை தொடர்ந்து தகுதிபெற்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி அடங்கிய உறையை 13-11-2013 ல் திறக்கப்பட்டதில் ரூ.148,98,000/- விலைப்புள்ளியை கொடுத்திருந்தனர்.

மேற்கண்ட நிறுவனத்தார் கொடுத்திருந்த விலைப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 14-11-2013 அன்று கூடி விவாதித்து மேற்கண்ட நிறுவனத்திடம் விலை குறைப்பு செய்து கொடுக்க கேட்கலாமென பரிந்துரை செய்யப்பட்டதில் நிறுவனத்தார் ரூ.148,98,000/- லிருந்து ரூ.148,79,000/- விலைக்குறைப்பு செய்து கொடுத்திருந்தனர். மீண்டும் இரண்டாவது முறை விலை குறைப்பு நிறுவனத்திடம் கேட்கப்பட்டதில் ரூ.148,79,000/- லிருந்து ரூ.148,26,000/- விலைக்குறைப்பு செய்து கொடுத்திருந்தனர். எனவே மீண்டும் ஒருமுறை மூன்றாம் முறையாக விலை குறைப்பு செய்து கொடுக்க நிறுவனத்திடம் 20-01-2014ல் கேட்கப்பட்டதில் ரூ.148,26,000/- லிருந்து ரூ.143,98,000/- விலைக்குறைப்புக்கு பின்னர் 2011ல் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை காட்டிலும் ரூ.53,98,000/- அதிகமாக கொடுத்த விலைப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 21-01-2014 ல் அன்று கூடி விவாதித்து மேற்கூறிய பணி குறிப்பிட்ட காலகெடுவிற்குள் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை அடைப்பு பணிகள் திறன்பட செய்ய வேண்டியிருப்பதாலும், கருத்துரை வழங்கியதுடன் தி/ள். வேல் என்டா்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், கோயமுத்தூர் நிறுவனத்தார் ரூ.1,43,98,000/-க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னர்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட கூடுதலாகவுள்ளதாலும் மாமன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கலாமென பரிந்துரை செய்துள்ளது.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள கழிவு நீர் அடைப்புகளை சரி செய்யும் பணிக்கென இரண்டு எண்ணிக்கைகள் கழிவு நீா் அடைப்பு அகற்று (Vehicle Mounted Jetting Cum Suction Machine) இயந்திரங்கள் மற்றும் மாநகராட்சி பகுதிகளிலுள்ள பொதுக்கழிப்பிடங்களை சுத்தம் செய்யும் பணிகளுக்கென இரண்டு எண்ணிக்கைகள் கழிவு நீா் உறிஞ்சி (Vehicle Mounted Vacuum Suction Machine) இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனங்களை குறைவான ஒப்பந்தபுள்ளி ரூ.143,98,000/-க்கு கொடுத்துள்ள தி/ள். வேல் என்டா்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், கோயமுத்தூர் நிறுவனத்தினரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மாமன்றத்தின் முடிவிற்கு வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண். 10547/2011/எம் டி4

## மாநகர மன்ற தீர்மானம் எண். 344 நாள் 30.01.2014

பொருளுக்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5644/ 2013/ எம் டி5 | வார்டு எண்.75 சாரமேடு நஞ்சுண்டாபுரம் ரைஸ் மில் பகுதியில் பொது கழிப்பிடம் கட்டுதல் | **09.75** | **21.10.2013** இரண்டாம் அழைப்பு | தி/ள்.திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.95% அதிகம் | தி/ள்.திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.73% அதிகம்(விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | 5645/ 2013/ எம் டி5 | வார்டு எண்.75 சாரமேடு நஞ்சுண்டாபுரம் காந்திநகர் பகுதியில் பொது கழிப்பிடம் கட்டுதல் | **09.75** | **21.10.2013** இரண்டாம் அழைப்பு | தி/ள்.திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.95% அதிகம் | தி/ள்.திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.73% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 3 | 5646/ 2013/ எம் டி5 | வார்டு எண்.75 சாரமேடு நஞ்சுண்டாபுரம் கறிக்கடை பகுதியில் பொது கழிப்பிடம் கட்டுதல் | **09.75** | **21.10.2013** இரண்டாம் அழைப்பு | தி/ள்.திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.95% அதிகம் | தி/ள்.திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.73% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 4 | 5647/ 2013/ எம் டி5 | வார்டு எண்.75 சாரமேடு நஞ்சுண்டாபுரம் பழனி ஆண்டவர் கோயில் வீதியில் பொது கழிப்பிடம் கட்டுதல் | **09.75** | **21.10.2013** இரண்டாம் அழைப்பு | தி/ள்.திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.95% அதிகம் | தி/ள்.திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.73% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 5 | 5281/ 2013/ எம் டி 2 | வார்டு எண்.23 க்குட்பட்ட மேற்கு பெரியசாமி சாலை மற்றும் தடாகம் சாலை சந்திப்பில் வணிக வளாகம் கட்டுதல் | **31.00** | **23.10.2013** இரண்டாம் அழைப்பு | திரு. என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 3.31% அதிகம் | திரு. என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 3.21% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 6 | 4024/ 2013/ எம் டி 5 | வார்டு எண் 15 க்குட்பட்ட பி.என்.புதூர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் புதிதாக அறிவியல் மற்றம் கணினி பயிற்சி வகுப்பறைகள் கட்டுதல் | **33.00** | **23.10.2013** இரண்டாம் அழைப்பு | திரு. என்.குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 3.37% அதிகம் | திரு.என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 3.37% அதிகம் |
| 7 | 360/ 2013/ எம் டி 5 | வார்டு எண்.20 மேற்கு மண்டலம் சீரநாயக்கன் பாளையம் நேதாஜி சாலையில் சத்துணவு கூடம் கட்டுதல் | **15.00** | **27.11.2013** மூன்றாம் அழைப்பு | திரு. எஸ். ராஜு கோயம்புத்தூர் 4.30% அதிகம் | திரு. எஸ். ராஜு கோயம்புத்தூர் 4.30% அதிகம் |
| 8 | 1375/ 2013/ எம் டி 5 | மேற்கு மண்டலம் வார்டு எண்.17 ஓனப்பாளையம் பகுதியில் ஐ.எஸ்.பி, கழிப்பிடம் கட்டுதல் | **15.00** | **27.11.2013** ஐந்தாம் அழைப்பு | திரு. எஸ். ராஜு கோயம்புத்தூர் 4.35% அதிகம் | திரு. எஸ். ராஜு கோயம்புத்தூர் 4.35% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | 774/ 2013/ எம் டி 2 | வார்டு எண்.47 சத்தி சாலை டெக்ஸ்டூல் அருகில் பாலத்தின் கிழபுறமாக அமைந்துள்ள 800 மி.மீ விட்டமுள்ள பில்லூர்–1 பிரதான குடிநீர் குழாயினை மாற்றி அமைத்தல் | 20.00 | 27.11.2013 ஐந்தாம் அழைப்பு | 1.திரு. கே.பி. செங்கோடன் கோயம்புத்தூர் 7.96% அதிகம்<br><br>2.தி/வ. கிளாசிக் இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 3.45% அதிகம் | தி/வ. கிளாசிக் இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 3.45% அதிகம் |
| 10 | 7902/ 2013/ எம் டி 2 | வார்டு எண்.97 எம்.ஜி..ஆர் நகர் பிரதான சாலையில் பிளாஸ்டிக் தார் தளம் செப்பணிடுதல் பணி | 25.00 | 27.11.2013 முதலாம் அழைப்பு | 1.தி/வ. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 4.97% அதிகம்<br><br>2.தி/வ. வர்தன் இன்பிராஸ்ரக்சர் கோயம்புத்தூர் 5.80% அதிகம் | தி/ரு. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 4.97% அதிகம் |
| 11 | 6175/ 2013/ எம் டி 2 | வார்டு எண் 75 க்குட்பட்ட சாரமேடு பகுதியிலுள்ள மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் ஆர்.சி.சி கூரையுடன் கூடிய தரை தளம், முதல் தளம் மற்றும் மாடிபடியுடன் கூடிய நான்கு வகுப்பறைகள் கட்டுதல் | 42.50 | 28.11.2013 இரண்டாம் அழைப்பு | 1.தி/வ. என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.83% அதிகம்<br><br>2.திருமதி. கே. பங்கஜம் கோயம்புத்தூர் 16.03% அதிகம் | தி/வ. என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.83% அதிகம் |
| 12 | 5648/ 2013/ எம் டி3 | வார்டு எண்.75 சாரமேடு நஞ்சுண்டாபுரம் மயானம் அருகில் பொது கழிப்பிடம் கட்டுதல் | 7.25 | 17.12.2013 மூன்றாம் அழைப்பு | தி/ள்.திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 3.58% அதிகம் | தி/ள்.திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 3.58% அதிகம் |
| 13 | 11211/ 2013/ எம் டி3 | வார்டு எண்.57 உப்பிலிபாளையம் அருகில் மசக்காளிபாளையம் பிரதான சாலையில் ஒடையின் குறுக்கே உள்ள பாலத்தை புதுப்பித்தல் பணி | 70.50 | 23.12.2013 முதலாம் அழைப்பு | 1.திரு.ஆர். செல்வராஜ் கோயம்புத்தூர் 4.40% குறைவு<br><br>2. தி/ள். என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 5.00% குறைவு<br><br>3.தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.42% குறைவு | தி/ள். என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 5.00% குறைவு |
| 14 | 2904/ 2013/ எம் டி 5 | வார்டு எண்.49 ரத்தினபுரி மாநகராட்சி ஆரம்ப பள்ளிக்கு உணவு அருந்தும் கூடம் கட்டும் பணி . | 39.20 | 23.10.2013 இரண்டாம் அழைப்பு | 1.திரு. ஆர். செல்வராஜ் கோயம்புத்தூர் 4.36% அதிகம்<br><br>2.திருமதி.சி.பாப்பாத்தி கோயம்புத்தூர் 6.33% அதிகம் | திரு. ஆர். செல்வராஜ் கோயம்புத்தூர் 4.01% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 15 | 2903/ 2013/ எம் டி 5 | வார்டு எண்.49 ரத்தினபுரி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு உணவு அருந்தும் கூடம் கட்டும் பணி . | 38.50 | 23.10.2013 இரண்டாம் அழைப்பு | திரு.ஆர். செல்வராஜ் கோயம்புத்தூர் 4.48% அதிகம்<br><br>2.திருமதி.சி.பாப்பாத்தி கோயம்புத்தூர் 6.45% அதிகம் | திரு.ஆர். செல்வராஜ் கோயம்புத்தூர் 4.13% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16 | 3967/ 2013/ எம் டி 5 | வார்டு எண்.23 மாநகராட்சி அம்மணியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கழிப்பிடம் கட்டும் பணி | **35.00** | **03.10.2013** இரண்டாம் அழைப்பு | 1. திரு. என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 1.68% அதிகம்<br>2. திரு.கே.கோவிந்தராஜ் கோயம்புத்தூர் 5.20% அதிகம் | திரு. என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 1.68% அதிகம் |
| 17 | 1348/ 2013/ எம் டி 5 | பாராளுமன்ற உறுப்பினர் நிதி வார்டு எண்.58 க்குட்பட்ட நீலிக்கோணாம்பாளையம் பேச்சியம்மன் கோயில் முன்புறம் சமுதாயக்கூடம் கட்டுதல். | **24.90** | **18.09.2013** ஐந்தாம் அழைப்பு | தி/ள். என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 4.96%அதிகம் | தி/ள். என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 4.96%அதிகம் |
| 18 | 4672/ 2013/ எம் டி 4 | வார்டு எண்.85 க்குட்பட்ட செல்வபுரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | **36.30** | **23.10.2013** இரண்டாம் அழைப்பு | திரு. என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 3.62% அதிகம் | திரு.என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 3.49% அதிகம்(விலை குறைப்பிற்கு பின்) |
| 19 | 8805/ 2013/ எம் டி 4 | கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட வெள்ளலூரில் அமைந்துள்ள மாநகராட்சி குப்பை கிடங்கின் வடபுறத்தில் சுற்றுசுவர் அமைத்தல் | **74.25** | **28.10.2013** முதலாம் அழைப்பு | 1.தி/வ. எஸ்.பி. பில்டர்ஸ் கோயம்புத்தூர் 6.77%அதிகம்<br>2. தி/வ. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.96% அதிகம் | தி/வ. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.96% அதிகம் |
| 20 | 8657/ 2013/ எம் டி 4 | மத்திய மண்டலம் அம்மன் குளம் புதிய குடியிருப்பு பகுதிக்கு புளியகுளம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து பிரதான குடிநீர் விநியோக குழாய் பதித்தல் | **35.60** | **28.11.2013** முதலாம் அழைப்பு | 1.திரு. ஆர். வேலுமணி கோயம்புத்தூர் 5.00% அதிகம்<br>2.தி/வ. கிளாசிக் கன்ஸ்ரக்சன் கோயம்புத்தூர் 10.00% அதிகம் | திரு. ஆர். வேலுமணி கோயம்புத்தூர் 5.00% அதிகம் |
| 21 | 6147/ 2013 எம் டி 5 | கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் 40 பொது கழிப்பிடங்களை ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிகள் செய்தல் | **39.60** | 27.11.2013 முதலாம் அழைப்பு | தி/ள். மைக்ரோ பியூர் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 0.003% அதிகம் | தி/ள். மைக்ரோ பியூர் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 0.003% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்

ந.க.எண். 5644 /2013/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண். 345 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகளில் குடிநீர் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் அமைக்க வேண்டி சாலை பகுதி வெட்டி எடுக்கப்படுகிறது. மேலும் மின்வாரியம் மற்றும் தொலை தொடர்பு சம்மந்தமான கேபிள்கள் பதிப்பதற்காகவும், கேபிள்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பொருட்டும் சாலைகள் வெட்டி எடுக்கப்படுகிறது. சாலைகளின் ஸ்திரத்தன்மையை நீடிக்க வேண்டி அவ்வப்போது தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

எனவே மாநகராட்சியின் ஐந்து மண்டலங்களிலும் உள்ள சாலைகளில் ஏற்படும் பழுதுகளை பொது மக்களின் பாதுகாப்பும், போக்குவரத்தையும் கருத்தில் கொண்டு உடனடியாக சரி செய்வதற்கு ( TAR PATCH) ஒரு சதுர மீட்டருக்கு அலகுவிலை ( Unit Rate) மாநகராட்சியால் நிர்ணயம் செய்யவும் ஐந்து சிப்பங்களாக மண்டல வாரியாக பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் சுமார் 5000 சதுர மீட்டர் அளவில் பணிகளை மேற்கொள்ளவும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
அதன் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | சிப்பம் எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில் ) |
|---|---|---|---|
| 1 | 1 | கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல் | 18.00 |
| 2 | 2 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல் | 18.00 |
| 3 | 3 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல் | 18.00 |
| 4 | 4 | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல் | 18.00 |
| 5 | 5 | மத்திய மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல் | 26.50 |
| | | மொத்தம் | 98.50 |

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டியும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண். 509 /2014 / எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 346 நாள் 30.01.2014**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 6**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு – கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம், சௌரிபாளையம் கிராமம், க.ச.492/1, வண்டிப்பாதை மற்றும் க.ச.503/2 இட்டேரி புறம்போக்கு – 0.56 ஏக்கர் நிலம் - தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை:** கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர், அவர்களின் கடிதம் ந.க.எண்.33431/2007/ஆ3, நாள்.13.10.2012.

*******

பார்வையில் காண் மாவட்ட ஆட்சியர் கடிதத்தில், கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம், சௌரிபாளையம் கிராமம், க.ச.492/1, வண்டிப்பாதை மற்றும் க.ச.503/2 இட்டேரி புறம்போக்கில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 0.56 ஏக்கர் நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்து வழங்க கோரியதன் பேரில், உரிய நடவடிக்கை மேற்கொள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம், சௌரிபாளையம் கிராமம், க.ச.492/1, வண்டிப்பாதை மற்றும் க.ச.503/2 இட்டேரி புறம்போக்கில் உள்ள 0.56 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நில மாற்றம் செய்ய மாநாகராட்சியின் ஆட்சேபணையின்மையை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.6015 /2013/எம்.எச்.5

## மாநகர மன்ற தீர்மானம் எண். 347 நாள் 30.01.2014

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பல்வேறு வாகனங்களை இயக்கும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5331/ 2013/ எம் டி2 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்கு மண்டலத்தில் பல்வேறு வாகனங்களை ஓட்ட தினசரி கூலி அடிப்படையில் ஓட்டுநர்கள் நியமனம் செய்தல் | 37.00 | 28.10.2014 முதலாம் அழைப்பு | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.97% அதிகம் 2. தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 15.10% அதிகம் | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.00% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | 5337/ 2013/ எம் டி2 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு மண்டலங்கயில் பல்வேறு வாகனங்களுக்கு துலக்குநர்கள் (Cleaners) தினசரி கூலி அடிப்படையில் நியமனம் செடயதல் | 41.00 | 28.10.2013 முதலாம் அழைப்பு | தி/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 3.43% அதிகம் 2. தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 18.62% அதிகம் | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 2.43% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 3 | 5332/ 2013/ எம் டி2 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வடக்கு மண்டலத்தில் பல்வேறு வாகனங்களை ஓட்ட தினசரி கூலி அடிப்படையில் ஓட்டுநர்கள் நியமனம் செய்தல் | 31.25 | 28.10.2013 முதலாம் அழைப்பு | தி/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.97% அதிகம் 2. தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 20.33% அதிகம் | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.00% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 4 | 5333/ 2013/ எம் டி2 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கிழக்கு மண்டலத்தில் பல்வேறு வாகனங்களை ஓட்ட தினசரி கூலி அடிப்படையில் ஓட்டுநர்கள் நியமனம் செய்தல் | 34.00 | 28.10.2013 முதலாம் அழைப்பு | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.97% அதிகம் 2. தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 20.33% அதிகம் | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.00% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 5 | 5334/ 2013/ எம் டி 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பிரதான அலுவலகத்தில் இலகு ரக வாகனங்களை ஓட்ட தினசரி கூலி அடிப்படையில் ஓட்டுநர்கள் நியமனம் செய்தல் | 49.50 | 28.10.2013 முதலாம் அழைப்பு | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.97% அதிகம் 2. தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 15.08% அதிகம் | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 3.09% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | 5335/ 2013/ எம் டி 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய மண்டலத்தில் பல்வேறு வாகனங்களை ஓட்ட தினசரி கூலி அடிப்படையில் ஓட்டுநர்கள் நியமனம் செய்தல் | 49.50 | 28.10.2013 முதலாம் அழைப்பு | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.97% அதிகம் **2.** தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் **15.10%** அதிகம் | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.00% அதிகம் **(விலை குறைப்பிற்கு பின்)** |
| 7 | 5336/ 2013/ எம் டி 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய, மற்றும் மேற்கு மண்டலங்கயில் பல்வேறு வாகனங்களுக்கு துலக்குநர்கள் (Cleaners) தினசரி கூலி அடிப்படையில் நியமனம் செடயதல் | 44.00 | 28.10.2013 முதலாம் அழைப்பு | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.98% அதிகம் **2.** தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் **20.40%** அதிகம் | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 3.98% அதிகம் **(விலை குறைப்பிற்கு பின்)** |
| 8 | 5338/ 2013/ எம் டி 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தெற்கு மண்டலத்தில் பல்வேறு வாகனங்களை ஓட்ட தினசரி கூலி அடிப்படையில் ஓட்டுநர்கள் நியமனம் செய்தல் | 31.25 | 28.10.2013 முதலாம் அழைப்பு | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.97% அதிகம் **2.** தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் **20.33%** அதிகம் | தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.00% அதிகம் **(விலை குறைப்பிற்கு பின்)** |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்

ந.க.எண். 5331 /2013/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 348 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 8**

பொருள்: உரிமம் இனம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் – வார்டு எண்.**86** (பழைய வார்டு எண்.**54**) – உக்கடம் லாரிப்பேட்டை மொத்த வியாபாரா மீன் மார்க்கெட் – கட்டணம் வசூலிக்கும் உரிமம்– தொடர்பாக.

பார்வை :
1) உதவி ஆணையர் (பொ), பழைய தெற்கு மண்டலம் (தற்போது மத்திய மண்டலம்) அவர்களின் அறிவிப்பு நாள் **29.4.2009.**
2) ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் உத்திரவு நாள் **11.7.2013.**
3) வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 180 நாள் 17.12.2013

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் , வார்டு எண்.**86** (பழைய வார்டு எண்.**54**) உக்கடம் லாரிப்பேட்டை மொத்த வியாபார மீன் மார்க்கெட் தற்போது புதியதாக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. பார்வை **1**–ல் கண்ட உதவி ஆணையர் (பொ). தெற்கு மண்டலத்தில் (தற்போது மத்திய மண்டலம்) அவர்களின் அறிவிப்பின்படி உக்கடம் லாரிப்பேட்டை மீன் மொத்த வியாபார மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமையை திரு.எஸ்.எஸ்.ஜமாலுதீன் என்பவருக்கு **1.5.2009** முதல் **31.3.2010** வரையிலான காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளியானது மாநகராட்சி ஏலம் மற்றும் குத்தகை இனங்கள் உறுதி செய்யும் குழுவின் அனுமதி ந.க.எண்.**9431/09/**அ**5** நாள் **29.4.2009**ன்படி ஒப்புக் கொள்ளப்பட்டு உரிமம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

அதற்கு பின்னர் புதியதாக மொத்த வியாபார மீன் மார்க்கெட் கட்டும் பணி துவங்கியதால் மேற்கொண்டு பொதுஏலம் ஏதும் நடத்தாமல் ஏற்கனவே ஏலம் எடுத்த திரு.ஜமாலுதீன் என்பவருக்கே அப்போதைய உதவி ஆணையர் (பொ) பழைய தெற்கு மண்டலம் (தற்போது மத்திய மண்டலம்) அவர்களால் ஒவ்வொரு மூன்று மாத காலத்திற்கும் ஏலத்தொகையில் **5** சதவிகிதம் உயர்வு செய்து உரிம காலம் நீட்டிப்பு செய்யப்பட்டு வந்தது.

இருப்பினும் மொத்த வியாபார மீன்மார்க்கெட் கட்டுமானப் பணி இன்னும் நிறைவடையாததால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏதும் ஏற்படக்கூடாது என்ற நோக்கில் தற்காலிக மொத்த வியாபார மீன் மார்க்கெட்டில் ஏற்கனவே பழைய தெற்கு மண்டலத்தில் (தற்போது மத்திய மண்டலம்) பின்பற்றிவந்த நடைமுறையைப் பின்பற்றி கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை ஒவ்வொரு மூன்று மாத காலத்திற்கும் **5** சதவிகிதம் ஏலத்தொகையில் உயர்வு செய்து திரு.எஸ்.எஸ்.ஜமாலுதீன் என்பவருக்கே பார்வை **2**ல் காண்ஆணையர் அவர்களின் உத்திரவின்படி கால நீட்டிப்பு செய்யப்பட்டு வருகிறது, புதிய மீன் மார்க்கெட் கட்டுமானப்பணி முடிவுற்று செயல்படத் துவங்கும் வரை தற்போதுள்ள நடைமுறைப்படி குத்தகைத் தொகை வசூலிக்க கால நீடிப்பு வழங்க அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 180 நாள் 17.12.2013ன்படி பொருளை அனுமதித்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**9431/2009**/அ**1(**தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண். 349 நாள் 30.01.2014**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 9**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு – சத்தி சாலையில் இயங்கி வரும் ஆம்னி பேருந்து நிலையத்தினை நீலாம்பூர் கிராமம் சர்வே எண்.**712/2**ல் **6.6** ஏக்கர் மற்றும் சர்வே எண்.**715/1**ல் **3.8** ஏக்கர் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கவும் நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து இடத்தினை பெறவும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆம்னி பேருந்து நிலையம் சத்தி சாலையில் தற்போது இயங்கி வருகிறது. நெடுஞ்சாலைத்துறையால் மேம்பாலம் கட்டும் பணி நஞ்சப்பா சாலையில் இருந்து டெக்ஸ்டூல் மேம்பாலம் வரை அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. இப்பணி ஆரம்பிக்கும் சமயத்தில் தற்போது இருக்கும் நிலையில் ஆம்னி பேருந்து நிலையத்தில சுமார் **30** அடி அகலத்திற்கு மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை அத்துறையால் எடுக்க உள்ளது. இந்நிலையில் ஆம்னி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய சூழ்நிலை உள்ளது.

கொடீசியா வளாகம் அருகில் விளாங்குறிச்சி கிராமம், காளப்பட்டி ஆகிய இரு கிராமத்தில் இருந்து **8.44** ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள பூமிதான போர்டுக்கு சொந்தமான இடத்தில் ஆம்னி பேருந்து நிலையம் அமைக்க மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பிரேரணை அனுப்பப்பட்டு உள்ளது. (தீர்மானம் எண்.**150**, நாள்.**30.07.2012**). ஆனால், அப்பிரேரணை அரசுக்கு பரிந்துரை செய்யப்படாததால் ஆம்னி பேருந்து நிலையத்திற்கு தற்போது மாற்று இடம் அத்தியாவசிய தேவையாக உள்ளதால் நீலாம்பூர் கிராமம் சர்வே எண்.**712/2**ல் **6.6** ஏக்கர் மற்றும் சர்வே எண்.**715/1**–ல் **3.8** ஏக்கரும் ஆக மொத்தம் **10.38** ஏக்கர் நிலம் தேசிய நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான இடமாக உள்ளது. இந்த இடத்தில் ஆம்னி பேருந்து நிலையம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கவும், அந்நிலத்தினை தேசிய நெடுஞ்சாலைத் துறையிடம் இருந்து பெற்று நில உரிமை மாற்றம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண். **8431/2012**/எம்.எச்.**5**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 350 நாள் 30.01.2014**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சியால் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டம் ரூ. **113.74** கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி தமிழக அரசால் அரசாணை எண்.(டி) **160** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ II) துறை நாள்.**17.04.2007** மற்றும் திருத்திய நிர்வாக அனுமதி அரசாணை எண் D **(551)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.எ.**2)** துறை நாள். **13.11.2007** ல் கீழ் குறிப்பிட்டுள்ள நிதி ஆதாரங்களுடன் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மத்திய அரசின் மானிய நிதி | ரூ.**56.87** கோடி |
| மாநில அரசின் நிதி | ரூ.**22.57** கோடி |
| மாநகராட்சி பங்கு நிதி | ரூ.**34.12** கோடி |
| மொத்தம் | ரூ.**113.74** கோடி |

மேற்படி பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டம் **6** (ஆறு) சிப்பப் பணிகளாக பிரிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் அனைத்து பணிகளும் ரூ. **159.85** கோடி மதிப்பில் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடான ரூ. **113.74** கோடியைவிட கூடுதலாக ரூ.**46.11** கோடி செலவிடப்பட்டு ரூ. **159.85** கோடி மதிப்பில் பணிகள் நிறைவேற்றப்பட்டதற்கான மாநில அரசின் திருத்திய நிர்வாக அனுமதி பெற மாமன்றத் தீர்மான எண் **83**, நாள் **01.06.2012**—ல் ஒப்புதல் வழங்கியதையடுத்து உரிய முன்மொழிவுகள் அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

திட்ட நிதி ஒதுக்கீடைக் காட்டிலும் கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையோடு தமிழக அரசு தனது அரசாணை எண் (டி) **546**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC II) துறை, நாள் **31.10.2013**—ல் திருத்திய நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ், பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டத்தினை ரூ. **159.85** கோடி மதிப்பில் நிறைவேற்றியதற்கான மாநில அரசின் திருத்திய நிர்வாக அனுமதி அரசாணையினை ( அரசாணை எண் (டி) **546**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC II) துறை, நாள் **31.10.2013**) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந. க. எண். **9190 / 02 /** ஜே. என். **5**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 351 நாள் 30.01.2014**

பதிவு செய்யப்பட்டது

---

**பொருள் எண் 11**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள பில்லூர் இரண்டாவது தனிக் குடிநீர் திட்டத்தின் மூலம் மாநகராட்சியால் பெறப்படவுள்ள **125** எம்.எல்.டி. குடிநீர் மற்றும் சிறுவாணி குடிநீர் திட்டம் மூலம் பெறப்படும் **75** எம்.எல்.டி குடிநீர் மொத்தம் **200** எம்.எல்.டி. குடிநீரினை பயன்படுத்தி, எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக அமைப்பினை அபிவிருத்தி மற்றும் சீரமைப்பு பணிகள் செய்து (Improving & revamping the existing proposed water supply scheme with continuous 24 x 7 pressured water supply) **24** மணி நேரமும் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு ரூ. **451.66** கோடி மதிப்பில் **"24 x 7 குடிநீர் திட்டத்தினை"** கீழ்க்கண்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் செயல்படுத்த மாநில அரசின் நிர்வாக அனுமதி பெற உரிய முன்மொழிவினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலமாக அரசிற்கு அனுப்ப மாமன்றம் தனது தீர்மானம் எண் **267**, நாள் **14.11.2013**—ல் ஒப்புதல் வழங்கியது.

| | | |
|---|---|---|
| மத்திய அரசின் மானிய நிதி (50%) | – | ரூ. 225.83 கோடி |
| மாநில அரசின் பங்கு தொகை (20%) | – | ரூ. 90.33 கோடி |
| மாநகராட்சியின் பங்கு நிதி (30%) | – | ரூ. 135.50 கோடி |
| மொத்தம் | – | ரூ. 451.66 கோடி |

இந்நிலையில் கடந்த 29.11.2013 அன்று அரசு முதன்மைச் செயலாளர் நிதித்துறை / தலைமை செயல் அலுவலர் (CEO), தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் (TamilNadu Infrastructure Development Board)அவர்கள் தலைமையில் அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசு செயலாளர் நிதித்துறை (செலவினம்), நகராட்சி நிர்வாக ஆணையர், நிதித்துறை இணைச் செயலாளர், நகராட்சி நிர்வாக இணை ஆணையர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்துகொண்ட **தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தின் உயர்மட்ட குழு** கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் திட்ட செயலாக்கத்தின் நிதி ஆதாரங்களின் சாத்தியக்கூறுகளை (Financial Feasibility Report) ஆராய்ந்து அறிக்கை அளிக்க நிதி ஆலோசக நிறுவனத்தினை (Transaction Advisor) கேட்டுக்கொண்டது. மேலும் இத்திட்டத்திற்கான ஒப்புதலை **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** தலைமையில் நடைடெபறவுள்ள திட்ட ஒப்புதல் குழுவின் ஒப்புதல் பெற உரிய முன்மொழிவுகளை தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தின் மூலமாக சமர்ப்பிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் மேற்படி நிறுவனத்தால் அளிக்கப்பட்ட சாத்தியக்கூறு அறிக்கையில் திட்ட செயலாக்க காலங்களில் கட்டுமானப் பொருட்கள் மற்றும் தொழிலாளர்கள் ஊதியங்களில் ஏற்படும் விலை ஏற்றங்களினால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை இதுவரை மாநகராட்சி தனது வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டு வந்துள்ளது. இதனால் மாநகராட்சிக்கு கூடுதல் நிதிச் சுமை ஏற்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. இவ்வகை கூடுதல் நிதிச்சுமையினை தவிர்க்கும் பொருட்டு உத்தேச திட்ட செயலாக்க காலங்களான 2014– 15, 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆகிய நிதி ஆண்டுகளில் ஏற்படும் விலை ஏற்றங்களின் அடிப்படையில் மாநகராட்சி பங்குத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதின் மூலம் ஏற்படும் அதிகப்படியாகும் கூடுதல் செலவினம் ஆகிய மொத்த கூடுதல் செலவினத் தொகையினை முழுமானியமாக மாநில அரசு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் மூலமாக பெற்று மாநகராட்சியின் பங்கு மற்றும் இத்திட்டத்திற்கு எதிர்கொள்ளும் கூடுதல் செலவினை ஈடுசெய்துகொள்ள வேண்டியும் மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட உத்தேச விலை ஏற்றங்களின் அடிப்படையில் மாறுபட்டுள்ள திட்ட கூடுதல் செலவினத்திற்கு மாநில அரசின் நிர்வாக அனுமதி கோரும் முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசிற்கு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> அ) மேற்படி 24 x 7 குடிநீர் திட்டத்தினை செயல்படுத்த மாநில அரசின் நிர்வாக அனுமதி கோரும் முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசிற்கு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டுத் தொகையில் மாநகராட்சி பங்கு மற்றும் மாநகராட்சி எதிர்கொள்ளும் கூடுதல் செலவினத் தொகையினை தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தின் மூலமாக அரசின் முழு மானியம் பெற்று மாநகராட்சியின் பங்கு தொகையினை ஈடு செய்து கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ) மேற்படி திட்டத்தினை திட்ட செய்லாக்க குழு (Project Management Consultancy) அமைத்து திட்டத்தினை மேற்கொள்ள ஏற்படும் செலவினத்தினை திட்ட மதிப்பீட்டில் சேர்த்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 2896 / 08 / ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண். 352 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பு அ, ஆ மற்றும் இ-க்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 8(எட்டு) நீர்நிலைகளை சுற்றுப்புற சூழல் மற்றும் நீர்வளங்களின் இயற்கை தன்மை மாறாமல் புனரமைத்து மேம்படுத்தவும் அதற்கான திருத்திய விரிவான திட்ட அறிக்கை மதிப்பீடு தொகை ரூ. 200.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ந.க.எண். 20292/13/WS1, நாள் 10.06.2013–ல் மேற்படி திட்டத்தினை தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின் (NLCP) கீழ் செயல்படுத்த தெரிவிக்கப்பட்டு, அதன் வரையறையின்படி (NLCP Guideline) திட்ட அறிக்கை தயாரித்து மீள சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் திட்டத்தினை செயல்படுத்த திட்ட நிதி ஆதாரமாக மத்திய அரசு மானியம் 70% அளவாகவும், மாநில அரசு மானியம் 20% அளவாகவும், மாநகராட்சி நிதி 10% அளவிலும் திட்டம் செலவினம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி திட்ட அறிக்கையினை திருத்தி அமைப்பதற்காக தி/ள். ஆப்ரோ, பெங்களூர் நிறுவனத்திடம் கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் திருத்திய விரிவான திட்ட அறிக்கை தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்ட வரையறையின்படி (NLCP Guideline) தயாரிப்பதற்கு ஏற்கனவே நிர்ணயம் செய்த ஒப்பந்த தொகை ரூ– 40,00,000/– மற்றும் சேவை வரியுடன் கூடுதலாக ரூ. 4,75,000/– மற்றும் சேவை வரி சேர்த்து வழங்குமாறு தனது 30.11.2013–ந் தேதிய கடிதத்தின் வாயிலாக தெரிவித்துள்ளனர். அதற்கு ஆணையர் அவர்களின் ஒப்புதல் கடந்த 09.1.2.2013 அன்று பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையான ரூ. 4,75,000/– மற்றும் சேவை வரி சேர்த்து மேற்படி நிறுவனத்திற்கு வழங்கி திருத்திய திட்ட அறிக்கையினை தயாரிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> அ) ஏற்கனவே மாநகர மன்ற தீர்மானம் எண் 158, நாள் 30.07.2013–ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டநிதியின் கீழ் ஒப்புதல் பெற தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை திட்ட மதிப்பீடு ரூ. 200.00 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ந.க.எண். 20292/13/WS1, நாள் 10.06.2013–ல் தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்ட வரையறையின்படி (NLCP Guideline) திருத்திய திட்ட அறிக்கை தயார் செய்து வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறும் பொருட்டு திட்ட பிரேரனை தயார் செய்து வழங்கவும், மாநகராட்சியின் பங்கு தொகையாக 10 % சதவிகிதம் மட்டும் பயன்படுத்தவும், மாநில அரசு நிதி 20 % சதவிகிதம், மத்திய அரசு 70 % சதவிகிதம் அளவிலும் நிதி உதவி பெறவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) நீர்நிலைகளை மேம்படுத்தும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கிய தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான மெஸ்ஸர்ஸ ஆப்ரோ, பெங்களூர் என்ற நிறுவனத்திற்கு தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்ட வரையறையின்படி (NLCP Guideline) கூடுதல் திருத்தங்கள் செய்து திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்க மேற்படி நிறுவனம் கோரியுள்ள கூடுதல் தொழில்நுட்ப கலந்தாலோசக கட்டணம் ரூ.4,75,000/– மற்றும் சேவை வரி சேர்த்து வழங்கவும், இச்செலவினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ) ஏற்கனவே மாமன்றம் தனது தீர்மான எண் 230, நாள் 29.12.2006–ல் மேற்படி திட்ட அறிக்கை (DPR) தயார் செய்து ஒப்புதல் பெற தி/ள், ஆப்ரோ, பெங்களூர் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கி நடவடிக்கை செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்ட வரையறையின்படி (NLCP Guideline) திருத்திய திட்ட மதிப்பீடு தயார் செய்து வழங்க மேற்படி தி/ள், ஆப்ரோ, பெங்களூர் நிறுவனம் நடவடிக்கை செய்யவும் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்:13090/06/ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண். 353 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பு அ, ஆ மற்றும் இ-க்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 13

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண்.24 மேற்கு ஆரோக்கியசாமி ரோடு வடக்கு பகுதியில் உள்ள (1-40) கடைகளில் கடை எண்.11-ஐ தமிழ்நாடு கனிமபொருள் நிறுவனத்திற்கு ஒப்படைப்பது – தொடர்பாக.

பார்வை - RC.No. 3648 / D / TAMILNADU MINERALS LTD. LETTER DATE 8.01.2014.

-----

பார்வையில் கண்ட தமிழ்நாடு கனிமபொருள் நிறுவனம் (TAMILNADU MINERALS LTD.) தங்களுக்கு காட்சி அறை (Showroom) அமைக்க அரசு கட்டிடம் வாடகைக்கு வழங்குமாறு கோரியுள்ளனர்.

தற்பொழுது மேற்கு ஆரோக்கியசாமி ரோடு வடக்கு பகுதியில் உள்ள (1-40) கடைகளில் கடை எண்.11-ற்கு கடந்த மூன்று ஏலத்திலும் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, மேற்படி கடை எண்.11-ஐ அரசு மதிப்பு (Base Value) ரூ.9000/- ற்கு மாதவாடகைக்கு நிர்ணயம் செய்து மேற்படி நிறுவனத்திற்கு வழங்க வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மாமன்றத்தின் பின்னேற்பிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.107 / 2014 / எ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண். 354 நாள் 30.01.2014**

பின்னேற்பு வழங்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – **23.02.2014**ந் தேதி முதல் **05.03.2014**ந் தேதி வரை இங்கிலாந்து நாட்டில் ஆய்வுப் பயணமும் **26.02.2014** மற்றும் **27.02.2014**ல் லண்டன் மாநகரில் நடைபெறும் “Energy from Waste Conference”ல் மற்றும் ஸ்வீடன் நாட்டில் **03.03.2014** மற்றும் **04.03.2014**ல் நகர்புற மேம்பாடு தொடர்பான ஆய்வில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோருதல் தொடர்பாக.

**பார்வை** Thiru. Gunnar Haglund, Consul, Consulate General of Sweden, Mumbai அவர்களின் கடித நாள். **25.01.2014.**

---------

பார்வையில் காணும் கடிதத்தில், **23.02.2014**ந் தேதி முதல் **05.03.2014**ந் தேதி வரை கீழ்கண்டவாறு பயணம் மேற்கொள்ள இருப்பதாக தெரிவித்து அப்பயணத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**23.02.2014** முதல் **01.03.2014** முடிய இங்கிலாந்து நாட்டில் ஆய்வு பயணம்
**26.02.2014** மற்றும் **27.02.2014**ல் லண்டன் மாநகரில் “Energy from Waste Conference
**03.03.2014** மற்றும் **04.03.2014**ல் ஸ்வீடன் நாட்டின் Stockholm நகரில் நகர்புற மேம்பாடு ஆய்வு.

மேலும் லண்டன் மாநகரில் நடைபெற உள்ள கருத்தரங்கில் கீழ்கண்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. திடக்கழிவு மேலாண்மை மற்றும் மறு சுழற்ச்சி.
2. நீர் மற்றும் கழிவு நீர் மேலாண்மை.
3. சுத்தம் / தொழில் நுட்பங்கள்.
4. சுற்றுப்புற சூழல்.
5. பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை.
6. கட்டுமான தொழில்நுட்பங்கள்.
7. நகர்புற போக்குவரத்து மேலாண்மை.
8. புதுபிக்கத்தக்க மற்றும் மாற்று எரிசக்தி மேலாண்மை.
9. மின்னாட்சி மற்றும் தகவல் தொழில் நுட்ப மேலாண்மை.
10. நகர்புற அடிப்படை கட்டமைப்பு மேலாண்மை.
11. சுற்றுச்சூழல் கல்வி மற்றும் சுற்றுலா மேலாண்மை.

மேலும் இக்கடிதத்தில், இங்கிலாந்து நாட்டில் மேற்கொள்ளவிருக்கும் ஆய்வுப் பயணம் மூலம் இம்மாநகரின் அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களை தனியார் பங்களிப்புடன் (PPP Mode) செயல்படுத்துவதில் ஆர்வமுள்ள ஐரோப்பிய நிறுவனங்களை கண்டறிய ஒரு வாய்ப்பு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட நாட்களில் இங்கிலாந்து மற்றும் ஸ்வீடன் நாட்டிற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் சென்று வர மாமன்றத்தின் அனுமதி வேண்டியும், மாமன்ற அனுமதிக்குப் பின்னர் அரசின் அனுமதி பெற கருத்துரு அனுப்பி வைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம். இதற்கான செலவினம் இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.109/2011/எம்.சி.6

**மாநகர மன்ற தீர்மானம் எண். 355 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – இம்மாநகராட்சிக்கு புதியதாக துணை ஆணையாளர் (பணிகள்) மற்றும் துணை ஆணையாளர் (சுகாதாரம்) பணியிடங்கள் தோற்றுவிக்க அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மாமன்றத்திற்கு ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை**
1 அரசாணை எண்.237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.27.09.1996.
2 அரசாணை (நிலை) எண்.77 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 4) துறை நாள்.13.05.1998.
3 அரசாணை (நிலை) எண்.114, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.25.08.2011.
4 அரசாணை (நிலை) எண்.140, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.15.09.2011.

-----

பார்வை 3ல் காணும் அரசாணையின்படி இம்மாநகராட்சியுடன் 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 1 ஊராட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டன. மேலும் பார்வை 4ல் காணும் அரசாணையின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி தற்போது 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு 100 வார்டுகளுடன் செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டபின்னர் 105.06 சதுர கிலோ மீட்டர் ஆக இருந்த பரப்பளவிலிருந்து 257.04 சதுர கிலோ மீட்டராக அதிகரித்துள்ளது.

பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் நிர்வாக கட்டிடங்கள், பள்ளி கட்டிடங்கள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள், சந்தைகள், வணிகக் கட்டிடங்கள், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள், வாகன நிறுத்தங்கள், கழிவு நீர் பண்ணை, அலுவலர் குடியிருப்புகள், பேருந்து நிற்குமிடங்கள், மயானங்கள், மாட்டுத் தொழுவங்கள், சலவைத்துறைகள், உடற்பயிற்சி மையங்கள், கழிப்பிடங்கள், சாலைகள், மழைநீர் வடிகால்கள், கிணற்று நீர் விநியோகம், குடிநீர் விநியோகம் மற்றும் நகரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

பொது சுகாதாரப் பிரிவில் 20 நகர்நலமையங்கள், 11 அலோபதி மருந்தகங்கள், 2 சித்தா மருந்தகங்கள் மற்றும் 3 ஆயுர்வேத மருந்தகங்கள் செயல்பட்டு வருகிறது. மேற்காண் மையங்களுக்கு நாள்தோறும் அதிகமான பொதுமக்கள் வந்து செல்கின்றனர். மேலும், பொது சுகாதாரப்பிரிவில் SJSRY திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளின் பொதுமக்களுக்கு கடனுதவி மற்றும் கைத்தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஒப்பந்த முறையில் சுகாதாரப் பணிகள், வாகன ஓட்டுநர் பணியிடங்கள் ஆகியன ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் ஒப்பந்த அடிப்படையில் மருத்துவமனைகள் மற்றும் பொதுக் கழிப்பிடங்களில் தனியார் (Out sourcing) மூலமாக பராமரிப்பு மற்றும் துப்புரவுப் பணிகள் நடைபெற்று வருகிறது. இது தவிர ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளும் நடைபெற்று வருகிறது.

பார்வை 1ல் காணும் 1996ம் வருடத்திய மாநகராட்சி பணியமைப்பு விதிகளுக்கான அரசாணையின்படியும், பார்வை 2ல் காணும் அரசாணையின்படியும் இம்மாநகராட்சிக்கு ஒரு துணை ஆணையாளர்(பொது) மட்டுமே தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்போது மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட பணிகளை துரிதமாக செயல்படுத்தி கண்காணிக்க வேண்டியுள்ளதாலும் இம்மாநகராட்சிக்கு புதிதாக துணை ஆணையாளர் (பணிகள்) மற்றும் துணை ஆணையாளர் (சுகாதாரம்) ஆகிய இரண்டு பணியிடங்களைத் தோற்றுவித்து தர அரசினைக் கேட்டுக் கொள்ளலாம். இப்புதிய பணியிடங்களைத் தோற்றுவிக்கும் பட்சத்தில் ஊதிய செலவினம் 49% க்கு மிகாமல் உள்ளது என்பதையும் அரசிற்குத் தெரிவிக்கலாம். இது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மாமன்றத்திற்கு ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 5734/2011/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 356 நாள் 30.01.2014**

பொருளுக்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 16**

பொருள் பொதுப்பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற உறுப்பினர்களின் பணித்திறனை மேம்படுத்தும் வகையில் ஓர் புத்தாக்கப் பயிற்சியினை தனியார் அமைப்பு மூலம் வழங்குதல் தொடர்பாக.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களுக்கு செய்யவேண்டிய பல்வேறு பணிகளை மேற்கொண்டு பொதுசேவை செய்து வருகின்றனர். அவர்களது மனிதவளத்தை மேம்படுத்தும் வகையில் ஓர் புத்தாக்கப் பயிற்சி வழங்கவேண்டும் என்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மாமன்ற உறுப்பினர்களின் பணித்திறனை ஊக்குவிக்கும் வகையில் மனிதவளத்தை மேம்படுத்தும் பொருட்டு 100 மாமன்ற உறுப்பினர்களுக்கும் தனியார் அமைப்புகள் மூலம் புத்தாக்கப் பயிற்சி வழங்கவும் இதற்காகும் செலவினங்களை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண் 339 /2014/ எம்.சி 8

**மாநகர மன்ற தீர்மானம் எண். 357 நாள் 30.01.2014**

பொருளுக்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 17**

பொருள்- நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி கிருஷ்ணாபுரம் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்துதல் - சார்பு

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி 62-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.சிங்கைS.பாலன் அவர்களது 27.12.2013-ம் நாளது கடிதத்தில், தமது வார்டுக்கு உட்பட்ட மாநகராட்சி கிருஷ்ணாபுரம் நடுநிலைப்பள்ளியில் தற்போது சுமார் 345 மாணவ/மாணவிகள் பயின்று வருகின்றனர். அப்பகுதியில் உயர்நிலைப்பள்ளி எதுவும் இல்லாத காரணத்தினால் அப்பகுதி மாணவர்கள் தனியார் பள்ளிக்குத்தான் செல்லக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக ஏற்படுகிறது. மேலும் இராமநாதபுரம் பகுதிக்கு கிழக்கே சுமார் 5 கிலோ மீட்டர் சுற்றளவில் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி இல்லை. எனவே தற்போது நடுநிலைப்பள்ளியாக உள்ள மேற்படி பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தி வழங்கினால் அப்பகுதி வாழ் மாணவர்கள் பள்ளியில் சேர்ந்து பயில விருப்பம் தெரிவித்துள்ளனர். பள்ளியைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெரும்பாலும் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களும், பொருளாதார வசதியில் பின்தங்கி உள்ளவர்கள் மட்டுமே மிகுதியாக உள்ளனர் எனவும், மாநகராட்சி கிருஷ்ணாபுரம் நடுநிலைப் பள்ளியில் 6 முதல் 10-ம் வகுப்பு வரை பயில 5 புதிய வகுப்பறைக் கட்டிடங்கள் கூடுதலாக கட்டப்பட்டு தயார் நிலையில் உள்ளது எனவும், 62-வது வார்டு பகுதியில் உள்ள மாணவ / மாணவிகள் பயன்பெறும் வகையில், மாநகராட்சி கிருஷ்ணாபுரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி வழங்குமாறும் கோரியுள்ளார்.

எனவே மாமன்ற உறுப்பினர் அவர்களது கோரிக்கையினை ஏற்று, மாநகராட்சி கிருஷ்ணாபுரம் நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை வழங்கக் கோரி அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பவும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த செலுத்தப்பட வேண்டிய பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.1.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவிற்கு அனுமதிக்காக பொருள் வைக்கப்பட்டு, கல்விக்குழு தீர்மான எண்.25 நாள்.27.01.2014-இன்படி அனுமதிக்கப்பட்டது.

எனவே, மாநகராட்சி கிருஷ்ணாபுரம் நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை வழங்கக் கோரி அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பவும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த செலுத்தப்பட வேண்டிய பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.1.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண்.12484/2013/கே-11

**மாநகர மன்ற தீர்மானம் எண். 358 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் தரம் உயர்த்தப்படவேண்டிய இம்மாநகராட்சியின் மற்ற பள்ளிகளையும் இத்துடன் சேர்த்துக் கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

மாநில, தேசிய மற்றும் ஆசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாநகராட்சி நிதியிலிருந்து செலவினத் தொகை வழங்க அனுமதித்து மாமன்ற தீர்மான எண்.218 நாள் 25.10.2013-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்காண் தீர்மானத்தின்படி மாநகராட்சி பள்ளிகளிலிருந்து தடகள மற்றும் விளையாட்டுப் போட்டிகளுக்கு செல்லும் மாணவ, மாணவிகளுக்கு கீழ்காண் தொகையினை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

மண்டல அளவில் போட்டிகளுக்கு செல்லும்
மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் - ரூ. 5,000/-

மாநில அளவில் போட்டிகளுக்கு செல்லும்
மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் - ரூ.20,000/-

தேசிய அளவில் போட்டிகளுக்கு செல்லும்
மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் - ரூ.50,000/-

ஏற்கனவே மாநில அளவில் நடைபெற்ற ஜூடோ போட்டியில் கலந்து கொண்ட மாநகராட்சி இராமகிருஷ்ணாபுரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு முன்பணமாக நிர்ணயம் செய்யப்பட்டரூ.20,000/-ல் 75 சதவிகிதமான ரூ. 15,000/- வீதம் 4 மாணவிகளுக்கு மொத்தம் ரூ.60,000/- முன்பணமாக வழங்கப்பட்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டியும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் எண். 11686/2013/கே 9

**மாநகர மன்ற தீர்மானம் எண். 359 நாள் 30.01.2014**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 19

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5727/2012 எம் டி5 | வார்டு எண் 60க்குட்பட்ட எஸ்.எம்.எஸ் லே அவுட்டில் பள்ளிக்கட்டிடம் கட்டுதல் | 75.00 | 23-11-12 2வது அழைப்பு | 1.திரு. கே.கோவிந்தராஜ் கோயம்புத்தூர் 4.99% அதிகம் | திரு. கே.கோவிந்தராஜ் கோயம்புத்தூர் 4.99% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

ந.க.எண் 5727/2012/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண். 360 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 20

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| **வ. எ ண்** | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 6776/ 2013/ எம் டி5 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 1,2,3,4 மற்றும் 26 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | **54.50** | **25.10.2013** இரண்டாம் அழைப்பு | 1.தி/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.99% அதிகம்<br>2. தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 9.82% அதிகம் | <u>முதல் முறை விலை குறைப்பிற்கு பின்</u> தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.83% அதிகம்<br><u>இரண்டாம் முறை விலை குறைப்பிற்கு பின்</u> தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.88 % அதிகம் |
| 2 | 6777/ 2013/ எம் டி5 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 27,28,29,30 மற்றும் 35 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | **54.70** | **25.10.2013** இரண்டாம் அழைப்பு | 1.தி/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 5.43% அதிகம்<br>2. தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.99% அதிகம் | <u>முதல் முறை விலை குறைப்பிற்கு பின்</u> தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.83% அதிகம்<br><u>இரண்டாம் முறை விலை குறைப்பிற்கு பின்</u> தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.88 % அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 6784/ 2013/ எம் டி5 | மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 70, 71, 72, 73, 74, 80, 81, 82, 83, 84, 25, 45, 48, 49, 50,51,52,53,54 மற்றும் 68 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | **69.00** | **11.12.2013** இரண்டாம் அழைப்பு | 1.திு/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.99% அதிகம்<br><br>2. திு/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 9.82% அதிகம் | <u>முதல் முறை விலை குறைப்பிற்கு பின்</u> திு/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.83 % அதிகம்<br><br><u>இரண்டாம் முறை விலை குறைப்பிற்கு பின்</u> திு/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.88 % அதிகம் |
| 4 | 6786/ 2013/ எம் டி5 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 42,43,44,46 மற்றும் 47 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்தஅடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | **54.30** | **25.10.2013** முதலாம் அழைப்பு | 1.திு/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 5.43% அதிகம்<br><br>2. திு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.99% அதிகம் | <u>முதல் முறை விலை குறைப்பிற்கு பின்</u> திு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.83 % அதிகம் <u>இரண்டாம் முறை விலை குறைப்பிற்கு பின்</u> திு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.88 % அதிகம் |
| 5 | 6785/ 2013/ எம் டி 5 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 31,38,39,40 மற்றும் 41 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்தஅடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | **54.90** | **25.10.2013** முதலாம் அழைப்பு | 1.திு/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 5.43% அதிகம்<br><br>2. திு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.99% அதிகம் | <u>முதல் முறை விலை குறைப்பிற்கு பின்</u> திு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.83 % அதிகம்<br><br><u>இரண்டாம் முறை விலை குறைப்பிற்கு பின்</u> திு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.88 % அதிகம் |
| 6 | 6782/ 2013/ எம் டி 5 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 10,13,14,15,17,18,21 மற்றும் 23 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்தஅடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | **65.00** | **25.10.2013** முதலாம் அழைப்பு | 1.திு/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 5.43% அதிகம்<br><br>2. திு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.99% அதிகம் | <u>முதல் முறை விலை குறைப்பிற்கு பின்</u> திு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.83% அதிகம்<br><br><u>இரண்டாம் முறை விலை குறைப்பிற்கு பின்</u> திு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.88 % அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 6778/ 2013/ எம் டி 5 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 11,12,16,19,20,22 மற்றும் 24 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்தஅடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | **56.00** | **25.10.2013** முதலாம் அழைப்பு | 1.திஃஎ.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 5.43% அதிகம்<br><br>2. திஃஎ. எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.99% அதிகம் | முதல் முறை விலை குறைப்பிற்கு பின் திஃஎ. எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.94% அதிகம்<br><br>இரண்டாம் முறை விலை குறைப்பிற்கு பின் திஃஎ. எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.88 % அதிகம் |
| 8 | 6783/ 2013/ எம் டி 5 | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 76, 77, 78, 79, 85, 86, 87,88,89,90,91 மற்றும் 92 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | **59.50** | **11.12.2013** இரண்டாம் அழைப்பு | 1.திஃஎ. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 9.82% அதிகம்<br><br>2.திஃஎ. வெற்றி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 3.07% அதிகம் | திஃஎ. வெற்றி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 3.07% அதிகம் |
| 9 | 6775/ 2013/ எம் டி 5 | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 93, 94, 95, 96, 97, 98,99 மற்றும் 100 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | **58.50** | **11.12.2013** இரண்டாம் அழைப்பு | 1.திஃஎ. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 9.82% அதிகம்<br><br>2.திஃஎ. வெற்றி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 3.07% அதிகம் | திஃஎ. வெற்றி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 3.07% அதிகம் |
| 10 | 6781/ 2013/ எம் டி 5 | கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 60–67,69 மற்றும் 75 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | **51.00** | **11.12.2013** இரண்டாம் அழைப்பு | 1.திஃஎ.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.99% அதிகம்<br><br>2. திஃஎ. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 9.82% அதிகம் | முதல் முறை விலை குறைப்பிற்கு பின் திஃஎ.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.83 % அதிகம்<br>இரண்டாம் முறை விலை குறைப்பிற்கு பின் திஃஎ.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.88% அதிகம் |
| 11 | 6779/ 2013/ எம் டி 5 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 5 – 9 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | **70.00** | **11.12.2013** இரண்டாம் அழைப்பு | 1.திஃஎ. எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 7.63% அதிகம்<br><br>2. திஃஎ.ஸ்ரீசீனிவாசா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் கோயம்புத்தூர் 4.99% அதிகம் | முதல் முறை விலை குறைப்பிற்கு பின் திஃஎ.ஸ்ரீசீனிவாசா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் கோயம்புத்தூர் 4.94% அதிகம்<br><br>இரண்டாம் முறை விலை குறைப்பிற்கு பின் திஃஎ.ஸ்ரீசீனிவாசா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் கோயம்புத்தூர் 4.88 % அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | 6780/ 2013/ எம் டி 5 | கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 32, 33, 34, 35, 36, 37,56 மற்றும் 59 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல். | 51.40 | 11.12.2013 இரண்டாம் அழைப்பு | 1.தி/ள்.விஸ்ணு இன்ப்ரா ஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.99% அதிகம்<br><br>2. தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 9.82% அதிகம் | முதல் முறை விலை குறைப்பிற்கு பின் தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.83% அதிகம்<br>இரண்டாம் முறை விலை குறைப்பிற்கு பின் தி/ள்.விஸ்ணு இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் கோயம்புத்தூர் 4.88% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 6776 /2013/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண். 361 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் நகர் நல மையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியினை கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3504/ 2013/ எம்இ4 | கோவை மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் 6 நகர்நல மையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் | 50.00 | 11.12.2013 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.நியூ இரா ஹெல்த்கேர் ப்ராடக்ஸ் (பி) லிட் கோயம்புத்தூர் தொழில்நுட்ப தகுதி அளிக்கவில்லை<br>2. தி/ள். ஜுபிடர் மெடிக்கல் எக்யுப்மெண்ட்ஸ் மேனுபேக்சர்ஸ் (பி) லிட் கோயம்புத்தூர் 12.86% அதிகம் | தி/ள். ஜுபிடர் மெடிக்கல் எக்யுப்மெண்ட்ஸ் மேனுபேக்சர்ஸ் (பி) லிட் கோயம்புத்தூர் 4.30% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3504 /2013/எம்.இ.4

**மாநகர மன்ற தீர்மானம் எண். 362 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 22

பொருள் –கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு – பொதுமக்கள் குறைகளை களைய – மாமன்ற உறுப்பினர்களுக்கான அலுவலகம் கட்டுதல்– நிர்வாக அனுமதி வேண்டி– பொருள் சமர்பித்தல் தொடர்பாக.

********

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பொதுமக்களின் குறைகளை களைய மாமன்ற உறுப்பினர்களுக்கென அந்தந்த வார்டு பகுதிகளில் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா, மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட பொது இடம், மற்றும் விளையாட்டு இடம் ஆகியவற்றை தவிர்த்து மீதமுள்ள இடங்களில் புதிதாக சுமார் 400 சதுரஅடி அளவு கொண்ட தனி அலுவலகம் ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.7.40 லட்சம் செலவில் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். 12539 /2013 / எம்.டி.4

### மாநகர மன்ற தீர்மானம் எண். 363 நாள் 30.01.2014

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்தும் மேலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதலாக ஏற்படும் செலவினத்திற்கு ஒப்புதல் அளித்தும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

கோயம்புத்தூர் மாநகராட்சியில் அலுவலக பணிகள் மேம்பாட்டிற்காக தனியார் மூலம் ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் நியமனம் செய்தல் மற்றும் ஒரு உதவி திட்ட அமைப்பாளர் நியமனம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 7267/ 2013/ எம்.சி.2 | மாமன்ற கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்ட நடவடிக்கைகளை தட்டச்சு செய்ய தனியார் மூலம் ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் நியமனம் செய்தல் | **01.30** | **05.12.2013** முதலாம் அழைப்பு | 1.தி/வ. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் ஒரு மாதத்திற்கு நபர் ஒருவருக்கு ரூ.14,700/-<br><br>2.தி/வ. வர்தன் இன்பிராஸ்ரக்சர் கோயம்புத்தூர்<br><br>ஒரு மாதத்திற்கு நபர் ஒருவருக்கு ரூ.14,800/– | தி/ரு. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர்<br><br>ஒரு மாதத்திற்கு நபர் ஒருவருக்கு ரூ.14,700/- |
| 2 | 8547/ 2013/ எம்.சி.1 | கோவை மாநகராட்சியில் தனியார் ஒப்பந்தம் மூலம் ஒரு உதவி திட்ட அமைப்பாளர் நியமனம் செய்தல் | **03.50** | **05.12.2013** முதலாம் அழைப்பு | 1.தி/வ. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் ஒரு மாதத்திற்கு நபர் ஒருவருக்கு ரூ.34,700/-<br><br>2.தி/வ. வர்தன் இன்பிராஸ்ரக்சர் கோயம்புத்தூர் ஒரு மாதத்திற்கு நபர் ஒருவருக்கு ரூ.34,800/– | தி/ரு. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர்<br><br>ஒரு மாதத்திற்கு நபர் ஒருவருக்கு ரூ.34,700/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இனம் இரண்டிற்கு **03.09.2014**ல் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் நிர்வாக முன்அனுமதிக்கு பின்னேற்பும் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண். 7267 /2013/எம்.சி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 364 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

பொருள் எண் 24

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆரம்ப பள்ளிகள் மற்றும் நடுநிலை பள்ளிகளில் காவலாளிகள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர்கள், மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| **வ. எண்** | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5874/ 2013/ எம் டி5 | கோவை மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காவலாளிகள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர்கள், மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் பணி | **33.10** | **11.12.2013** முதலாம் அழைப்பு | 1. திரு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 3.93% அதிகம்<br><br>2. திரு/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 8.75% அதிகம் | <u>விலை குறைப்பிற்கு பின்</u> திரு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 3.63% அதிகம் |
| 2 | 5875/ 2013/ எம் டி5 | கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி ஆரம்ப பள்ளிகள் மற்றும் நடுநிலை பள்ளிகளில் காவலாளிகள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர்கள், மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் பணி | **42.10** | **11.12.2013** முதலாம் அழைப்பு | 1. திரு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 5.06% அதிகம்<br><br>2. திரு/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 10.10% அதிகம் | <u>விலை குறைப்பிற்கு பின்</u> திரு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.77% அதிகம் |
| 3 | 5869/ 2013/ எம் டி5 | கோவை மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட ஆரம்ப பள்ளிகள் மற்றும் நடுநிலை பள்ளிகளில் காவலாளிகள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர்கள், மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் பணி | **40.75** | **11.12.2013** முதலாம் அழைப்பு | 1. திரு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 5.28% அதிகம்<br><br>2. திரு/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 10.37% அதிகம் | <u>விலை குறைப்பிற்கு பின்</u> திரு/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் கோயம்புத்தூர் 4.98% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 5874 /2013/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண். 365 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 25

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் அபிவிருத்தி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9865/ 2013/ எம் டி2 | வார்டு எண்.38 க்குட்பட்ட கருப்பண்ண மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் மகளிர் மற்றும் சிறுவர் பூங்கா அமைத்தல் | **72.30** | **28.10.2013** முதலாம் அழைப்பு | 1.திருமதி.சி.பாப்பாத்தி கோயம்புத்தூர் **0.73% அதிகம்** 2.திரு.ஆர்.செல்வராஜ் கோயம்புத்தூர் **0.88%குறைவு** | திரு.ஆர்.செல்வராஜ் கோயம்புத்தூர் **0.88%குறைவு** |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். 9865 /2013/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 366 நாள் 30.01.2014**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 26

| | |
|---|---|
| பொருள்- | நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை தரம் உயர்த்துதல் - சார்பு |

மாநகராட்சி பள்ளிகளில் ஆரம்பப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள் மற்றும் உயர்நிலைப்பள்ளிகள் முறையே நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்த மாநகராட்சி (பட்டதாரி நிலை, ஆரம்பப்பள்ளிகள்) மேற்பார்வையாளர்களிடம் விவரம் சேகரித்து வழங்க தெரிவிக்கப்பட்டது. அதன்படி தற்போது தரம் உயர்த்த கருத்துருக்கள் அனுப்பப்படவேண்டிய பள்ளிகளின் விவரம் வருமாறு.

**மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்படவேண்டியப் பள்ளிகள்**

1. மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, மணியகாரன்பாளையம்.

**உயர்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்படவேண்டியப் பள்ளிகள்**

2. மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, சங்கனூர்.
3. மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, எஸ்.ஐ.ஹெச்.எஸ்.காலனி,
4. மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, கணபதி இராமகிருஷ்ணாபுரம்.
5. மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கிருஷ்ணராயபுரம்.

**நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்படவேண்டியப் பள்ளிகள்**

6. மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, கணபதி
7. மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, நெசவாளர்காலனி.

எனவே மேற்காண் 2 ஆரம்பப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தவும், 4 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தவும்,அதற்கென பொது மக்கள் பங்குத் தொகையாக தலா ஒருபள்ளிக்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.4.00 இலட்சமும், மேற்கண்ட 1 உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தவும், அதற்கென பொது மக்கள் பங்குத் தொகையாக ரூ.2.00 இலட்சமும் அரசு கணக்கில் செலுத்தவும் மாமன்றத்திற்கு அனுமதிவேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 543/2014/கே-11

**மாநகர மன்ற தீர்மானம் எண். 367 நாள் 30.01.2014**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 27

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - தேசிய இறைச்சி மற்றும் கோழி பதப்படுத்தும் வாரியத்தின் மூலம் நடைபெறும தொடர்பான தேசிய கருத்தரங்கத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், ஆணையாளர் கலந்து கொள்ளுதல் - தொடர்பாக.

--------

துணை செயலாளர் National Meat & Poultry Processing Board, Newdelhi அவர்களின் கடித்தின்படி ஹைதராபாத்தில் பிப்ரவரி மாதம் 22.02.2014 மற்றும் 23.02.2014-ம் ஆகிய தேதிகளில் தேசிய இறைச்சி மற்றும் கோழிப்பதப்படுத்தும் வாரியத்தின் மூலம் நடைபெறும் 7-வது மேயர்களின் தேசிய கருத்தரங்கில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், ஆணையாளர் அவர்கள், முதன்மை பொறியாளர், கால்நடை மருத்துவ அலுவலர் மற்றும் இது தொடர்பான அலுவலர்கள் கலந்துகொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 73/2014/எம்.இ.4

**மாநகர மன்ற தீர்மானம் எண். 368 நாள் 30.01.2014**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 28

| | |
|---|---|
| **பொருள்:** | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு – மேற்கு மண்டலம், வார்டு எண்.22, மேட்டுப்பாளையம் சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை B-11 காவல் நிலையம் அமைக்க அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது – காவல் துறை ஆணையர் காவல் நிலையம் அமைக்க முன் நுழைவு அனுமதி வழங்க கோரியது – மாமன்றத்திற்கு பொருள் சமர்பித்தல் – தொடர்பாக. |
| **பார்வை:** | 1. மாமன்ற தீர்மானம் எண்.232. நாள்.24.09.2012.<br>2. மாநகர காவல் துறை ஆணையாளர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் C.No.R1/22518/2005, நாள்.28.01.2014. |

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22, மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான S.F.158/A1 சங்கனூர் கிராமத்தில் உள்ள இடத்தில் தற்போது B11 காவல் நிலையம் இயங்கி வருவதாகவும், இவ்விடத்தினை B11 காவல் நிலையத்திற்காக, காவல் ஆணையர் பெயருக்கு நில மாற்றம் செய்ய கேட்டு கொள்ளப்பட்டதன் பேரில், பார்வை 1ல் காண் மாமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மேற்படி 9297 ச.அடி நிலத்தினை காவல் நிலையம் அமைக்க மாமன்ற தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனையின் அடிப்படையிலும் அரசாணை (நிலை) எண்.25, ந.நி (ம) கு.வ துறை, நாள்.25.02.2000ன் படியும் காவல் ஆணையர் பெயரில் காவல் துறையினருக்கு நில உரிமை மாற்றம் செய்ய முன்நுழைவு அனுமதி வழங்க உரிய ஆணையினை வழங்க பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது, பார்வை 2ல் காண் காவல் துறை ஆணையர் அவர்கள் கடிதத்தில், மேற்படி இடத்தில் கடந்து 15 வருடங்களாக B11 காவல் நிலையம் இயங்கி வருவதாகவும், இவ்விடம் காவல் நிலையம் அமைவதற்கு ஏற்ற இடமாக உள்ளதாகவும், மான்யக் கோரிக்கை 2012ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் நிலையம் அமைக்க அறிவித்துள்ளதை தொடர்ந்து நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தும், ஏற்கனவே அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணையின்படி மாவட்ட வருவாய் அலுவலரால் செய்யப்டும் நிலமதிப்பினை செலுத்த தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி இடத்தில் B11 காவல் நிலையம் அமைக்க முன்நுழைவு அனுமதி வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

காவல் துறை ஆணையர் அவர்களின் கடிதத்தில் மான்யக் கோரிக்கை **2012**ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் நிலையம் அமைக்க அறிவித்துள்ளதை தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும், மாவட்ட வருவாய் அலுவலரால் செய்யப்படும் நிலமதிப்பினை செலுத்த தயாராக உள்ளதாக பார்வை **2**ல் காண் கடிதத்தில் சம்மதம் தெரிவித்துள்ளதாலும், ஏற்கனவே அரசுக்கு முன்நுழைவு அனுமதி கோரிய பிரேரணை மீதான உத்திரவினை எதிர்நோக்கி, மாநகராட்சிக்கு சொந்தமான S.F.158/A1 சங்கனூர் கிராமத்தில் உள்ள **9297** ச.அடி நிலத்தினை காவல் நிலையம் அமைக்க காவல் துறை ஆணையருக்கு முன்நுழைவு அனுமதி வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண். **6610/2012**/எம்.எச்.**5**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 369 நாள் 30.01.2014**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 29

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 13 தெலுங்குபாளையம் கிராமம் க.ச.எண் 544 (நி.அ.எண். 7) ல் உள்ள வெங்கிட்டாபுரம், அண்ணா வீதியில் 16 குடும்பங்கள் சுமார் 40 ஆண்டுகளாக இட்டேரி புறம்போக்கு பகுதியில் வீடுகட்டி வசித்து வருகின்றனர். அரசாணை எண் 172, நாள் 23.05.2012-ன்படி, அண்ணா வீதியில் உள்ள 16 நபர்களது ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இட்டேரி புறம்போக்கு நிலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைகிறது. மேற்படி இடத்தில் சாலை விஸ்தரிப்புபோ அல்லது சாலை நீடிப்போ வரவாய்ப்பு இல்லை. எனவே 16 நபர்களது ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்குவது தொடர்பாக கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை சான்று வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் 7155/2013/எச்.1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண். 370 நாள் 30.01.2014**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 30

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட பெரிய கடை வீதி என்.எச். ரோடு, வெரைட்டி ஹால் ரோடு, ஒப்பணக்கார தெரு, ராஜா தெரு ஆகிய சாலைகள் மற்றும் வ.உ.சி. பூங்கா முன்புறம் உள்ள சாலை, வ.உ.சி. மைதானத்தை ஒட்டி மேற்குபுறம் உள்ள இரு சாலைகளையும் சேர்த்து பாதசாரிகள் மட்டும் பயன்படுத்த ஏற்றவாறு வடிவமைப்பு செய்யவும் பராமரிக்கவும் விருப்ப கேட்பு அறிக்கை தயாரிக்க ஏலம் கேட்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் 770/2014/எம்.எச். 5

**மாநகர மன்ற தீர்மானம் எண். 371 நாள் 30.01.2014**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 31

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ரூ. 5.00 கோடி செலவில் பல்வேறு மரபுசாரா எரிசக்தி திட்டங்களை, மரபு சாரா எரிசக்தித்துறை அமைச்சரகத்தின் பைலட் சோலார் சிட்டி திட்டத்தின்கீழ் ஒதுக்கிடு செய்யப்படும் ரூ. 2.50 கோடி நிதி மற்றும் மாநகராட்சி பங்காக ரூ. 2.50 கோடியினை மாநகராட்சி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து அமல்படுத்தவும், மேற்கண்ட திட்ட நிதியில் ரூ.2.50 கோடியினை மாநகராட்சிக்கு வழங்க மரபு சாரா எரிசக்தி அமைச்சரகத்திடம் கோர அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் சிறப்பு 4/2014/எஉ.பொ

**மாநகர மன்ற தீர்மானம் எண். 372 நாள் 30.01.2014**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி